**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 195/2021**

2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 19.01.2026 | | |
| பெயர்: | புருகானுதீன் (PW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | அப்துல்ரஜக் |
| கிராமம்: | துளசேந்திரபுரம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | பிரம்பு தொழில் | வயது : | 50/2026 |

**முதல் விசாரணை : 19.01.2026**

நான் இவ்வழக்கின் 1ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. கடந்த 01.10.1981 தேதியிட்ட முகமது சுல்தான் என்பவர் M.E.வஹாபுவுக்கு எழுதிக்கொடுத்த அடமான அக்ரிமெண்ட் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 05.05.2000 தேதியிட்ட M.A.ரஹீம் என்பவர் 2ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகாரப்பத்திரம் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. கடந்த 29.05.2000 தேதியிட்ட 2ம் வாதி எனது தாயாரான உம்மா கனி அவர்களுக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் அசல் **வா.சா.ஆ.3** ஆகவும்

4. சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.66/2006ன் சார்வு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகவும்

5. கடந்த 15.11.2021 தேதியிட்ட பிரதம மந்திரி பயிர்க்காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயிர்க்காப்பீடு செய்ததற்கான கணிணி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.5** ஆகவும்

6. கடந்த 08.10.2021 தேதியிட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவிலிருந்து 1ம் வாதிக்கு வந்த காவல்துறை அழைப்பாணை அசல் **வா.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.